திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, ஆம் என்போரும் இல்லாமலும், இல்லை என்போரும் இல்லாமலே நிறைவேற்றப்படுகிறது.

தற்காலிகத் தலைவர்: சம்பிரதாய முறையில் சொல்லவேண்டியிருக்கிறது.

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(5) தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1972).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே,

சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

சென்னை மாநகராட்சிப் பணியாளரமைப்பில் தற்போது ஐந்து வகையான அதிகாரிகள், பணியாளர்கள் உள்ளனர். I-A வகைப் பதவிகளுக்கு தற்போது அரசு நியமனம் செய்கிறது. I-B, II வகைப் பதவிகளுக்கு மாநகராட்சி மன்றம் நியமனம் செய்கின்றது. இந்த நியமனம் அரசின் ஒப்புதலுக்குட்பட்டதாகும். திங்கள் ஒன்றுக்குச் சம்பளம் அல்லது பேரளவுச் சம்பளம் ரூ. 100க்கு மேற்படும், III,IV ஆம் வகைப் பதவிகளுக்கு, மேயர் மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர், கமிஷனர் ஆகியோரைக் கொண்ட நியமனக்குழு ஏற்பளிக்கிற விண்ணப்பதாரர் பட்டியலிலிருந்து கமிஷனர் நியமனம் செய்கின்றார். III, IV-ஆம் வகையின் கீழ் உள்ள ஏனைய பதவிகளுக்கு அதாவது திங்கள் ஒன்றுக்கு சம்பளம் அல்லது பேரளவுச் சம்பளம் ரூ. 100-க்குக் குறைவாக உள்ள பதவிகளுக்கு கமிஷனர் நியமன அதிகாரியாவர்.

இது தொடர்பாக, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் எண் 4/1919) விரிவான திருத்தங்கள் செய்வது பற்றிக் கருத்துத் தெரிவிக்கத் தனிப்பட்ட குழு ஒன்றை

@ 251-ம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாநகராட்சி மன்றம் அமைத்தது என்பதை நான் இங்கு கூற விழைகிறேன். முன்பிருந்த செயற் குழுக்களை மீண்டும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதும் மாநகராட்சிப் பணியாளரமைப்பின் கீழ் அதிகாரிகள், பணியாளர்கள் வகைப் பதவிகளுக்குக் கீழ்க்காணும் நியமன அதிகாரிகளை நியமிக்கவேண்டும் என்பதும் தனிப்பட்ட குழு தெரிவித்த திருத்தங்களில் ஒன்றாகும்.

I-A, I-B, II- ஆம் வகைப் பதவிகள்—அரசின் ஒப்புதலுக்குட்பட்டு மன்றம் நியமனம் செய்வதாகும்.

III, IV- ஆம் வகைப் பதவிகள்—கமிஷனர் நியமனம் செய்வதாகும் அவசரமெனக் கருதப்பட்ட சில கருத்துக்கள் குறித்து மேற் சொன்ன சட்டத்தைத் திருத்தும் வகையில் சட்டம் ஒன்று ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள கருத்துக்களைப் பொறுத்தவரையில், மேற்படி சட்டத்தை விரிவாகத் திருத்துவது பற்றி அரசு முனைந்து பரிசீலித்து வருகிறது. இது குறித்து அரசு இறுதி முடிவு எடுக்கவும், அடங்கல் சட்டம் ஒன்றைக் கொண்டு வரவும் இன்னும் சிறிது காலமாகும். இதற்கிடையே, மாநகராட்சிப் பணியாளரமைப்பு குறித்து தனிப்பட்ட குழு செய்த பரிவுரையை மட்டும் மீண்டும் வலியுறுத்தி, சென்னை மாநகராட்சி மன்றம் 20—6—1972-ல் 716-ஆம் எண் தீர்மானம் இயற்றியுள்ளது.

I-A வகைப் பதவிகளுக்குத் தற்போது அரசினால் நியமனம் செய்யப்பட்டு வருகின்றது. இந்தப் பதவிகள் குறித்துத் தற்போதுள்ள நிலையையே நீடிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் ஈண்டுக் குறிப்பிடலாம் I-B, II- ஆம் வகைப் பதவிகளுக்கு மன்றம் நியமன அதிகார மன்றமாகும். ஆனால் இந்த நியமனம் அரசின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும். எனவே, மேற்படி சட்டத்தில் இந்த விதித்துறையை நீடிக்கக் கருதப்பட்டுள்ளது. மேலும் இது மாநகராட்சி மன்றத்தின் வேண்டுகோளையொட்டியும் அமைந்துள்ளது. III, IV- ஆம் வகைகளின் கீழ் வருபவையும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100க்கு மேற்பட்டு சம்பளம் உடையதுமான பதவிகளுக்கு, மேயர், கமிஷனர், மாநகராட்சி மன்றம் தேர்ந்தெடுத்த ஓர் உறுப்பினர் ஆகியோரைக் கொண்ட நியமனக் குழுவினால் ஏற்பளிக்கப்பட்ட விண்ணப்பதாரர் பட்டியலிலிருந்து கமிஷனர் நியமனம் செய்கிறார். IV -ஆம் வகையின்கீழ் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100க்குக் குறைவாகச் சம்பளம் உடைய ஏனைய பதவிகளுக்கு கமிஷனரால் நியமனங்கள் செய்யப்படுகின்றன. III, IV- ஆம் வகைகளின் கீழ் உள்ள எல்லாப் பதவிகளுக்கும்

கமிஷனரால் நியமனங்கள் செய்யப்படலாம் என்று மன்றம் பரிவுரை செய்துள்ளது. இப்பரிவுரையை ஏற்றுக் கொள்ளக் கருதப் பட்டுள்ளது. இதன் விளைவாக, நியமனக் குழுவை நீடிப்பதற்கு அவசியமேதும் இல்லை. எனவே, இக்குழுவை ரத்து செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன பரிவுரை தவிர, III, IV ஆம் வகைகளில் கீழ் சேர்க்கப்படாதவர்களும், மாநகராட்சி நிதியிலிருந்து ஊதியம் பெறுபவர்களும், அரசுத் துறைகளில் சில்லறைச் செலவு நிதியிலிருந்து ஊதியம் பெறும் பணியாளர்களின் பதவித் தரத்திற்கு இணையாகக் கருதக்கூடியவர்களுமான ஏனைய பணியாளர் எவரையும் நியமிப் பதற்கு கமிஷனருக்கு அதிகாரம் அளிக்கக் கருதப்பட்டுள்ளது. இச் சட்ட வரைவு மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது என்று கூறிக்கொண்டு இவ்வரைவினை இவ்வவையில் ஆய்விற்கு வைக்கிறேன்.

தற்காலிகத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

* திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இம் மாநிலத்தை ஆட்சி புரியும் அமைச்சர்களுக்கு அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு சிறு பியூனை நியமிக்கக் கூட அதிகாரம் கிடையாது. அவ்வாறு நியமிப் பதற்கு சர்வீஸ் கமிஷன் என்றெல்லாம் இருக்கின்றது. நிர்வாக தோரணையில் தான் நியமனங்கள் அமைவது ஜனநாயகத்தில் ஒழுக் கத்தை உண்டுபண்ணும். அப்படியில்லாமல் தேர்தலில் தேர்ந்தெடுக் கப்பட்டவர்களிடத்தில் நியமனம் செய்யும் அதிகாரத்தைக் கொடுக் கும்போது, அவர்கள் எவ்வளவு தான் நல்லவர்களாக இருந்தாலும் கூட, ஒழுக்கக்குறைவு ஏற்படுவதைக் கடந்த சில வருடங்களாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதை ஒழிப்பதற்கு இந்த மசோதா மூலம் சென்னை மாநகராட்சியில் ஆரம்பம் ஏற்பட்டிருக்கிறது. நியமனக் குழுவை—தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் கொண்ட குழுவை ரத்து செய்து, கமிஷனருக்கு 3-ம், 4-ம் தர சிப்பந்திகளை நியமிக்க அதிகாரம் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். இதே மாதிரி வேறு ஒரு கட்டத்திலும் பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப் பட்ட மட்டும் அரசாங்க ரீதியில் சர்வகட்சித் தலைவர்களைக் கலந்தாலோசித்து ஒரு முடிவெடுக்கப்பட்டது. இம்மாதிரிச்

செய்வது ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதாகும். ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கவுரவத்தை, மரியாதையை, நிலை நிறுத்த இது ஒரு நல்ல காரியம். நிர்வாகம் சம்பந்தப்பட்ட காரியங்களை நிர்வாக அதிகாரிகள் செய்வதில் குற்றம் ஏற்பட்டால் அதைக் கண்டிக்க, மேற்பார்வை பார்க்க அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகையினால் அதை வரவேற்கிறேன். இதற்கு யாரும் ஆட்சேபம் தெரிவிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். இப்போது பல திருத்தங்களுடன் இருக்கும் சென்னை மாநகராட்சிச் சட்டத்தை "கோடிஃபை" செய்து—அடங்கல் செய்து—ஒரே சட்ட மாகக் கொண்டு வருவோம் என்று 1967-க்கு முன்பிருந்த காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து, இதோ, அதோ என்று சொல்லிக்கொண்டிருந் தார்கள். இந்த அரசாங்கம் வந்ததிலிருந்தும் பல முறை சொல்லி யிருக்கிறார்கள். 1966-ல் மசோதாவை "பப்ளிஷ்" பண்ணினார்கள் என்று நினைக்கிறேன். பின்னால் நிறைவேறாமல் நின்று விட்டது. ஆகவே இந்தச் சட்டத்தை "கோடிஃபை" செய்து, காலதாமதம் இல்லாமல், ஒரே சட்டமாக புதிய சட்டம் கொண்டு வந்து நிறை வேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

(மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்தத் திருத்த வரைவுச் சட்டத்தை ஆதரித்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான காரணத்தை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டி னார்கள். சென்னை மாநகராட்சி மன்றம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியதன் காரணமாக, அதையொட்டி இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. நாமாக அந்த அதிகாரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களாக அந்த அதிகாரத்தை நம்மிடத்தில் கொடுப்பதை வைத்து இச்சட்டத்தைக் கொண்டு வருகிறோம். மதுரை மாநகராட்சியில் நியமனக் குழு இருந்து கொண்டிருக்கிறது. கொடுக்கப்பட்ட அதிகாரம் அவர்களுக்குச் சரிவரவில்லை என்பதற்காகத் தான் இந்த மசோதா—நாமாக எடுத்துக்கொள்ள அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரம் எடுக்கப்பட்டு, இப்போது கமிஷனர் 3-வது, 4-வது வகைச் சிப்பந்தி களை நியமிக்கலாம் என்று இருக்கிறது. பேரவையிலே எடுத்துச் சொல்லும்போது குறிப்பிட்டேன், இங்கேயும் குறிப்பிட விரும்பு கிறேன். மற்றைய நகராட்சி மன்றங்களிலும், மதுரையிலும் கூட

ஆணையர் பல்வேறு பதவிகளுக்கு "எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சி லிருந்து" பட்டியல் வாங்கி நியமிக்க வேண்டும் என்று இருக்கிறது. சென்னை மாநகராட்சியில் "எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்"சிலிருந்து பட்டியல் வாங்க வேண்டுமென்ற அவசியம் இல்லாமல் இருந்தது. இப்போது கமிஷனருக்கு அதிகாரம் கொடுப்பதன் மூலம், துணை விதிகள் வகுக்கும்போது, "எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்"சிலிருந்து பட்டியல் பெற்றுத் தான் நியமிக்க வேண்டும் என்று ஆக்கலாம்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல், அவர்களிடத்தில் இந்தப் பொறுப்புகளை ஒப்படைப்பதால், எவ்விடத்தில் குறைபாடுகள் நோக்கினும் அவர்களைக் கண்டிக்கவும், நடவடிக்கை எடுக்கவும் அரசுக்கும் மற்றவர்களுக்கும் உரிமை இருக்கிறது. அதற்கு அஞ்சி சட்டதிட்டங்களுக்குப் புறம்பாகப் போகாத வகையில், ஒழுங்காக நடக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கும். அதற்கு முன்னோடியாக சென்னை மாநகராட்சிச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் நல்ல சூழ்நிலை ஏற்படுத்த இது கொண்டுவரப் படுகிறது. இதை மன்ற உறுப்பினர்கள் ஆதரித்ததற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்து இதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை, ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு

(சட்டப் பேரவை முன் வடிவு எண் 32/1972) நிறைவேற்றப்பட வேண்டும்**"**. என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன்உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1972) நிறைவேற்றப் பட வேண்டும்":

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(6) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1972).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1972) ஆய்வுக்கு எடுத்து-க் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன் மொழிகிறேன்.

இந்தச் சட்ட வரைவை முன்மொழிந்து பேசுகையில் 1964 ஆம் ஆண்டில் மதுரையில் தொடக்கப்பள்ளிக் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்து அதனுல் மாணவியர் பலர் மடிந்தது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கலாம் என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். இத்தகைய விபத்து நிகழாவண்ணம் தடுப்பதன் பொருட்டும், பொதுக் கட்டிடங்கள் அனைத்தின் கட்டுமானமும் உறுதியாக உள்ளனவா என்பதைக் கவனத்துடன் பார்த்துக் கொள்வதன் பொருட்டும், தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு பொதுக் கட்டிடங்கள் (உரிமமளித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 13/1965) நிறைவேற்றப்பட்டது. இது 1966 ஏப்ரல் 1-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டத்தைச் செயல்படுத்துவதால் தொல்லை ஏற்படும் என்று காரணம் காட்டி, இச்சட்டத்தை ரத்து செய்யவாவது வேண்டும் அல்லது இச்சட்டத்தின் ஆளுகையினின்றும் தமக்கு

@ 252 ஆம் பக்கத்தில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.